## 8 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை!

## கழக வெற்றிக்கு – மக்கள் திரள் ஆதரவு!










சென்னை, பிப்.21-

பரப்புரை திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை வெட்ட வெளிச்சமாக்கும் விதமாகவும் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுக்க 234 சட்டமன்ற தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடைபெற்று வருகிறது.

19-02-2026 இல் தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டமானது 8 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி கரமாக நடைபெற்றது. போடிநாயக்கனூர் தொகுதியில் திரு.பொன் முத்துராமலிங்கம், தென்காசி தொகுதியில் திரு. ஏ.கே.எஸ். விஜயன், ஆலந்தூர் தொகுதியில் திருமதி.கனிமொழி சோமு, அரக்கோணம் தொகுதியில் திரு.கடலூர் புகழேந்தி , செய்யாறு தொகுதியில் திரு.கலாநிதி வீராசாமி, திருச்சி கிழக்கு தொகுதியில் திரு.மருது அழகுராஜ், கன்னியாகுமரி தொகுதியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், பவானி தொகுதியில் திரு.கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பட்ஜெட்டில் நிதி இல்லை - வளர்ச்சி திட்டமில்லை - நலத்திட்டங்களைக் கூட நிறுத்த சதி என நமக்கு வஞ்சகம் செய்து வரும் ஒன்றிய பாஜகவுக்கு ஒத்து ஊதும் அடிமைக் கூட்டணியின் துரோகங்களை சிறப்புப் பேச்சாளர்கள் தோலுரிக்க பொது மக்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர். .

திருச்சி கிழக்கில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் பேசிய மருதுஅழகுராஜ் அவர்கள் “ “அதிமுகவை அமித்ஷாவிடம் அடமானம் வைத்த தவழ்ந்தபாடி எடப்பாடி, ஒன்றிய பாஜக அரசிடம் இருந்து மிதிதான் வங்கிதருவாரே தவிர, நிதி அல்ல” என எடப்பாடி பழனிசாமியை கடுமையாக சாடி பேசினார். செய்யாறு தொகுதியில் கலாநிதி வீராசாமி அவர்கள் பேசும்போது “ ஆட்சிக்கு வந்தவுடன் கொரோனா நிவாரண நிதியாக 4000 ரூபாய் வழங்கியது திராவிடமாடல் அரசு. மகளிர் உரிமை தொகையாக குடும்பத்தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது இந்த தேர்தல் வெற்றிக்கு பிறகு அது 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அதோடு சட்டமன்ற தேர்தலை காரணம் காட்டி மகளிருக்கு வழங்கப்படும் உரிமை தொகை நிதியை நிறுத்த பார்த்தது ஒன்றிய பாஜகவும் அதன் அடிமை அதிமுக வும் அதை முறியடிக்கும் விதமாக முன் கூட்டியே மூன்று மாத நிதி அதனுடன் கோடை கால சிறப்பு நிதி என 5000 ரூபாயை வழங்கி உள்ளார். இப்படி மக்கள் நலனுக்காக மக்களுடன் இணைந்து இருப்பதனால் தான் தமிழ்நாட்டு மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்னால் நிற்கிறார்கள்” என கழக அரசின் நலத்திட்டங்களையும் அதை தடுக்க முயலும் டெல்லி அணியின் சதியையும் மக்கள் முன் எடுத்துரைத்தார்.

ஆலந்தூர் சட்டமன்ற தொகுதியில் பேசிய கனிமொழி சோமு அவர்கள் “ 2021ஆம் ஆண்டு ஒன்றிய பாஜக அரசு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என வாக்குறுதி கொடுத்தது ஆனால் அதை இன்னும் அவர்கள் நிறைவேற்ற வில்லை. ஆனால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்று நோய் தட்டுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என அறிவித்து முதல் கட்டமாக 30,000 பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கியுள்ளார். பொங்கல் பரிசாக ரூ.3000 , ஜனவரி மாத உரிமை தொகை ரூ.1000, தற்போது கொடுத்துள்ள உரிமை தொகை ரூ.5000 என இந்த இரண்டே மாதங்களில் ரூ.9,000 யை மக்கள் நலனுக்காக கொடுத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த NDA அரசுக்கு, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.” என அதிரடியாக பேசினார். கழகத்தலைவர் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அணியா இல்லை.? மோடியின் டெல்லி அணியா என்பதே வரும் தேர்தல். டெல்லி டப்பா எஞ்சின் ஆட்சி நடக்கும் மணிப்பூர், டெல்லி, ஒரிசா, உத்திரபிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களின் அவலநிலையும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மேயர் பிரியா ராஜன் தலைமையில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் 1800 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.என்.நேரு வழங்கி சிறப்புரையாற்றி, வருகை தந்த அனைவருக்கும் பிரியாணி பரிமாறி மகிழ்ந்தார். இவ்விழாவில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, பெரம்பூர் ஆர்.ராஜன், புனிதவதி எத்திராசன் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, முன்னிலை வகித்தனர். இதில் எஸ்.புஷ்பராஜ், பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், மு.சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில், நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக துணைப் பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான முனைவர் க. பொன்முடி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, மற்றும் மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மருத்துவர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் அ.சா.ஏ.பிரபு, மா.ஜெயச்சந்திரன், ஜி.கார்த்திகேயன், ம.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், வழக்கறிஞர் பி.கே.பாபு, ஏவிஆர்.கோபால்ராம், செல்வி.நிவேதா ஜெசிக்கா, சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், ஆர்.சதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வே.வாசு தலைமை!

# வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் “தமிழ்நாடு தலைகுனியாது” கூட்டம்!

### டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. சிறப்புரை!

சென்னை, பிப்.21-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் “தமிழ் நாடு தலை குனியாது” மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.02.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, அயன்புரம், போர்ச்சிஸ் ரோடு, ஜாயிண்ட் ஆபிஸ் அருகில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் வே. வாசு தலைமை ஏற்கிறார்.

இப்பொதுகூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி, அ.வெற்றி அழகம் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின் எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், சுதாதீனதயாளன் எம்.சி, வானவில்விஜய், எல்.பி.எப். ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, லதாவாசு எம்.சி, எம். சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், W.அமுல், நா.அறிவுடைநம்பி, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ.துரை, ம. ஜெகதீஸ்வரன் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.சபாபதி, வ.ரமேஷ் பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ. சத்தியநாராயணன், கி. ஜெய்சங்கர், ப. செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக மருத்துவரணித் தலைவர் - செய்தி தொடர்பாளர் டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு, எம்பி சிறப்புரையாற்றுகின்றார்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராடசி மேயர் பிரியாராஜன், ப. தாயகம்கவி எம்.எல்.எ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex. MLA, ஓ.ஏ.நாகலிங்கம், கே.எஸ்.இரவிச்சந்திரனி Ex .MLA, பி.கே.மூர்த்தி எம்.சி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன் Ex .MLA, எஸ்.மணிமுடி Ex. MLA, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமடார், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம் சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் எ.புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் MC, மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு சரிதாமகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி MC, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் MC. பகுதி கழக செயலாளர்கள்: டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, V.சுதாகர் எஸ்.முரளி எஸ்.இராஜசேகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி பி.ஜெ. துளசிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ்(எ)நீலகண்டன் MC. எம்.இப்ராஹிம்கனி. டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன் பா. ஜெகதீஷ் க.வினோத் எஸ். தனசேகர் ஆர்.டி.சங்கர் நானா நா.துலுக்காணம் எல்.பி.எப்.மோகன் துரை கண்ணன் ஜி.தாமோதரன் ராஜேஸ்வரிஸ்ரீதர் MC ஜி.வி. நாகவள்ளி MC எம். பெரோஸ்கான் பி.விஜயகுமார் எம்.விநாயகம் ஆர். எஸ்.சித்திக் ம.அசோக்குமார் க.பா.பிரதீப்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது து.ஆயிரம் இரா.வீரமணி வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஜெ.எஸ். பிரபு வி.து.இராமமூர்த்தி பா. இளையா ம.கலைச்செல்வி ஐ.சி.எப்.மு.சுரேஷ் பாபு வில்லிவாக்கம் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சேகர் ஆர். தீனதயாளன் க.சுகுமாரன் மா.அகிலன் பா.ஜானி சொ.முருகேசன் ப.லோகு பாபு கே.எஸ்.பாபு வில்லிவாக்கம் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: ஆர். கோபாலகிருஷ்ணன் சிட்கோ.ப.சுரேஷ்பாபு கோ.மணிவேந்தன் மா.கபிலன் பா.தே.தீனதயாளன் கே.எஸ்.பாபு க.மணிமாறன் எஸ்.கே.தீபக்குமார் ம.சுந்தர் எபி ஆ.சக்திவேல் பூ.சத்தியேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் எ.வேதா நன்றி கூறுகிறார்.

## ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ – வீடு வீடாக பரப்புரைக்காக

# படப்பை - திருப்பெரும்புதூர் தொகுதிக்கான பயிற்சிக் கூட்டங்கள்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! படப்பை ஆ.மனோகரன் – சங்கீதா வேலு பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 21 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாக பரப்புரைக்காக பயிற்சிக் கூட்டம் இன்று (21.2.2026 - சனிக்கிழமை) காலை 11 மணியளவில் மாவட்டச் செயலாளர்- அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் படப்பை தில்லை மகாலில் நடைபெறுகிறது.

இதில் பயிற்சி அளிக்கும் மகளிர் தொகுதி பொறுப்பாளரான மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சங்கீதா வேலு பயிற்சியளிக்கிறார்.

மேலும்திருபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பைஆ.மனோகரன் , ஒன்றிய குழு தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றிய பொறுப்பாளர் ஏ.மணி, வடக்கு ஒன்றிய செயலாளர் கோபால் , தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.டி.கருணாநிதி, நகர செயலாளர் திருபெரும்புதூர் நகரக் கழகச் செயலாளர் சதீஷ்குமார், நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, நகரக் கழக செயலாளர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் ஒன்றிய, நகர, பகுதி,பேரூர்களில் உள்ள பூத்களின் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள அந்தந்த பூத் மகளிர் குழுத் தலைவர்களை பங்கேற்றிட செய்திட வேண்டும் என்று குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு அரசின் சார்பில், 19.2.2026 அன்று தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 172 – வது பிறந்த நாளையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப் படத்திற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு. அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், அமைச்சர் மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா.பாஸ்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.




திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பருத்திபட்டு பகுதியில் தனியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் உலக தாய்மொழி நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் தமிழ்த்தாய் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதைச் செலுத்தி விழா சிறப்புரையாற்றினர். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர்வே.இராஜாராமன் ஆவடி மேயர் ஜி.உதயகுமார் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், ஆணையர் ஆவடி மாநகராட்சி ரா.சரண்யா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள்,தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் வே.ரேவதி. கல்லூரி தலைவர் சி.குஞ்சிதபாதம், கல்லூரி நிருவாக இயக்குநர் சு.கு.திருக்குமரன். கல்லூரி முதல்வர் முனைவர்.அனிதா ராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.